**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.125/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.6** |
| **Name** | **:** | **திரு.சிவக்குமார்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**1,2,4 முதல் 8 எதிரிகள் ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.06.2023.**

**முதல் விசாரணை -**

**நான் வந்தவாசி தாலுக்கா நல்லூர் கிராமத்தில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். 1.8.2011ஆம் தேதி மதியம் 12 மணிக்கு மேல் சத்தியவாடியில் இருந்து நல்லூர் செல்வதற்காக நான் வந்துக்கொண்டு இருந்தபோது போலிசார் சத்தியவாடியில் இருந்து 3 கிலோமீட்டர் முன்பாக விசாரித்துக்கொண்டு இருந்தபோது கூட்டமாக இருந்ததால் போய் பார்த்தேன்.**

**போலிசார் விசாரணை செய்ததற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். கையொப்பம் அ.சா.ஆ.2. என்னுடன் யார் கையொப்பம் போட்டார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை.**

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.8.2011 அன்று மதியம் 1.00 மணிக்கு போலிசார் சம்பவ இடம் வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தபோது நானும் சதாசிவமும் கையொப்பம் போட்டு விட்டு தற்போது எதிரிகள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1,2 மற்றும் 4 முதல் 7 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் செல்வதற்கு முன்பே கூட்டம் இருந்தது என்றால் சரி தான். 10,20 பேர் இருப்பார்கள் என்றால் இருப்பார்கள். என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது ரோட்டில் வைத்து தான் என்றால் சரி தான்.

<u>8ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.</u>

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.

Additional Sessions Judge,

Arani.